# QB365 Question Bank Software Study Material

## குடிமையியல் - பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 55

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) தேசிய பாதுகாப்பு மிக அவசியமானது ஏன்?

**பதில் :** ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அதன் தேசிய பாதுகாப்பு மிகவும் அவசியமானது ஆகும். இது நாட்டின் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

2) பின்வருவனவற்றிக்கு விரிவாக்கம் தருக.
அ) SFF ஆ) ICG இ) BSF ஈ) NCC

**பதில் :** அ) SFF - சிறப்பு எல்லைப்புறப் படை (The Special Frontier Force - SFF)
ஆ) ICG - இந்திய கடலோரக் காவல் படை (Indian Coast Guard - ICG)
இ) BSF - எல்லை பாதுகாப்புப் படை (Border Security Force - BSF)
ஈ) NCC - தேசிய மாணவர் படை (Natioanl Cadet Corps - NCC)

3) மத்திய ரிசர்வ் காவல் படை பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

**பதில் :** 1. சட்டம், ஒழுங்கு மற்றம் உள்நாட்டு பாதுகாப்பினை திறம்பட மற்றும் திறமையாக பராமரிப்பதற்கும் இந்திய அரசாங்கத்திற்கு உதவுவதே மத்திய ரிசர்வ் காவல் படையின் நோக்கமாகும்.
2. மத்திய ரிசர்வ் காவல் படையின் ஒரு சிறப்பு பிரிவே விரைவு அதிரடிப்படை ஆகும். இது கலவரம், கூட்டநெரிசலை கட்டுப்படுத்துதல், மீட்பு நிவாரண நடவடிக்கைகள் மற்றும் அமைதியற்ற சூழ்நிலைகள் ஆகியவற்றை திறம்பட எதிர்கொள்கிறது.

4) அணிசேரா இயக்க நிறுவனத்தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, யுகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோராவர்.

5) இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகளை எழுதுக.

**பதில் :** இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகள்,
1. தேசிய நலனைப் பாதுகாத்தல்.
2. உலக அமைதியினை அடைதல்.
3. ஆயுதக் குறைப்பு.
4. காலனித்துவம், இனவெறி மற்றும் ஏகாதிபத்தியம் ஆகியவற்றை நீக்குதல்.
5. நட்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
6. பொருளாதார வளர்ச்சி.

6) சார்க் உறுப்பு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**பதில் :** சார்க் அமைப்பு 8 உறுப்பு நாடுகளைக் கொண்டது. அவைகள், இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான், நேபாளம், பூடான், இலங்கை, மாலத்தீவு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியனவாகும்.

7) இந்திய ஆயுதப்படைகள் என்பன யாவை?

**பதில் :** இந்திய ஆயுதப்படையானது நாட்டின் இராணுவப்படை, கடற்படை, விமானப்படை மற்றும் கடலோரக்காவல்படை ஆகியவற்றை உள்ளடக்கிய முதன்மைப் படைகள் ஆகும். அவை பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றன.

8) இந்திய கடலோரக் காவல்படை பற்றி ஒரு சிறுகுறிப்பு தருக.

**பதில் :** (i) இந்திய பாராளுமன்றத்தின் 1978 ஆம் ஆண்டு கடலோர காவல்படை சட்டத்தின்படி, இந்தியாவின் சுதந்திர ஆயுதப் படையாக இந்திய கடலோரக் காவல்படை 1978 இல் நிறுவப்பட்டது.
(ii) இது பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. இந்த கடலோர காவல்படையானது கடற்படை

மீன்வளத்துறை, சுங்கத்துறை, மத்திய மாநில காவல்படை ஆகியவற்றுடன் ஒத்துழைத்து செயல்படுகிறது.

9) மத்திய ஆயுதப்படையின் ஐந்து பிரிவுகள் யாவை?

**பதில் :** (i) மத்திய ரிசர்வ் காவல் படை (CRPF)
(ii) இந்தோ - திபெத்திய எல்லைக் காவல் (ITBP)
(iii) மத்திய தொழிலக பாதுகாப்புப் படை(CISF)
(iv) எல்லை பாதுகாப்புப் படை (BSF)
(v) சிறப்பு சேவை பணியகம் (SSB)

10) இந்தியா எந்தெந்த நாடுகளுடன் தனது எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளது?

**பதில் :**
வடமேற்கில் - பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்
வடக்கில் - சீனா, நேபாளம், பூடான்
கிழக்கில் - வங்காளதேசம்
தூரகிழக்கில் - மியான்மர்
தென்கிழக்கில் - இலங்கை
தென்மேற்கில் - மாலத்தீவு

11) நெல்சன் மண்டேலா குறிப்பு வரைக.

**பதில் :** 1. நெல்சன் மண்டேலா ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவராக செயல்பட்டார்.
2. இவர் இனவெறிக்கு எதிரான ஓர் உறுதியான போராளி ஆவார்.
3. நிறவெறிக் கொள்கை என்பது இனப்பாகுபாட்டின் ஒரு மோசமான வடிவம் ஆகும்.
4. இது மனிதாபிமானத்திற்கும் மக்களாட்சிக்கும் எதிரானது.
5. 1990ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவில் இனவெறிக் கொள்கையை முடிவுக்கு கொண்டு வந்தது இந்திய வெளியுறவுக் கொள்கையின் மிகச்சிறந்த வெற்றியாகும்.

12) இந்தியா எந்தெந்த நாடுகளுடன் எல்லைகளைப் பகிர்ந்து கொண்டுள்ளது?

**பதில் :** வடமேற்கில் - பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்
வடக்கில் - சீனா, நேபாளம், பூடான்
கிழக்கில் - வங்காள தேசம்
தூர கிழக்கில் - மியான்மர்
தென் கிழக்கில் - இலங்கை
தென்மெற்கில் - மாலத்தீவு

13) தேசிய போர் நினைவுச் சின்னம் (National War Memorial) குறிப்பு எழுதுக.

**பதில் :** 1. இந்திய ஆயுதப் படைகளை கௌரவிப்பதற்காக இந்திய அரசால் தேசியப் போர் நினைவுச் சின்னம் கட்டப்பட்டுள்ளது.
2. இந்நினைவுச் சின்னம் புதுடெல்லியில் உள்ள இந்தியா கேட் அருகில் 40 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.
3. இராணுவ வீரர்களின் பெயர்கள் நினைவுச் சின்னத்தின் சுவர்களில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.

14) தேசிய மாணவர் படை (National Cadet Corps - NCC) விவரி.

**பதில் :** 1. தேசிய மாணவர் படை என்பது இராணுவப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முத்தரப்பு சேவை அமைப்பாகும்.
2. இந்த அமைப்பு நாட்டின் இளைஞர்களை ஒழுக்கமான மற்றும் தேசபக்தி மிக்க குடிமக்களாக உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது.
3. தேசிய மாணவர் படை என்பது ஒரு தன்னார்வ அமைப்பாகும்.
4. இது இந்தியா முழுவதும் உள்ள உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களிலிருந்து மாணவர்களை தேர்ந்தெடுக்கிறது.
5. மேலும் மாணவர்களுக்கு சிறிய ஆயுதங்கள் மற்றம் அணிவகுப்புகளில் அடிப்படை இராணுவப் பயிற்சியும் அளிக்கிறது.

15) மத்திய தொழிலக பாதுகாப்புப் படையின் முக்கிய பணிகளை கூறுக.

**பதில் :** 1. மத்திய தொழிலக பாதுகாப்புப்படை 1969 மார்ச் 10ஆம் நாள் இந்திய நாடாளுமன்ற சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.
2. முக்கிய அரசாங்க கட்டடங்களை பாதுகாப்பது, டெல்லி மெட்ரோ பாதுகாப்பு மற்றும் விமான நிலைய பாதுகாப்பு ஆகியன இதன் முக்கிய பணிகள் ஆகும்.

**5 மதிப்பெண் வினாக்கள்** 5 x 5 = 25

16) இந்திய இராணுவப் படையின் அமைப்பு மற்றும் நிர்வாகத்தினை விவரி.

**பதில் : இந்திய இராணுவப்படையின் அமைப்பு மற்றும் நிர்வாகம்,**
1. இந்திய இராணுவப்படை என்பது நில அடிப்படையிலான ஒரு பிரிவு ஆகும்.
2. இது உலக அளவில் மிகப்பெரிய தன்னார்வப் படைப்பிரிவு ஆகும்.
3. இது ஜெனரல் என்று அழைக்கப்படும் நான்கு நட்சத்திர அந்தஸ்து கொண்ட இராணுவப்படைத் தளபதியால் வழி நடத்தப்படுகிறது.
4. தேசிய பாதுகாப்பு, தேசிய ஒற்றுமை, அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல், உள்நாட்டு அச்சுறுத்தல்கள் மற்றும் நாட்டின் எல்லைக்குள் அமைதியையும் பாதுகாப்பையும் பேணுதல் ஆகியன இந்திய இராணுவப் படையின் முதன்மைப் பணிகளாகும்.
5. மேலும் இது இயற்கை பேரழிவு மற்றும் பேரிடர் காலங்களில் மனிதாபிமான மீட்புப் பணிகளையும் செய்கிறது.
6. இந்திய இராணுவம் 'ரெஜிமென்ட்' என்ற ஒரு அமைப்பு முறையைக் கொண்டது.
7. இது செயல்பாட்டு ரீதியாகவும் புவியியல் அடிப்படையிலும் ஏழு படைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

17) துணை இராணுவப்படை பற்றி எழுதுக.

**பதில் :** 1. உள்நாட்டு பாதுகாப்பை பராமரிக்கவும், கடலோரப் பகுதியை பாதுகாக்கவும், இராணுவத்திற்கு உதவுவதற்கும் பயன்படுத்தப்படும் படைகள் துணை இராணுவப் படைகள் என்றழைக்கப்படுகின்றன.
2. இரயில் நிலையங்கள், எண்ணெய் வயல்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகிய முக்கியமான பகுதிகளை பாதுகாக்கும் பணியைச் செய்கிறது.
3. இயற்கை மற்றும் மனித பேரழிவுகளிலிருந்து மக்களை மீட்கும் பணியிலும் இப்படைகள் ஈடுபடுகின்றன.
4. அமைதி காலங்களில் இந்த துணை இராணுவப்படைகள் சர்வதேச எல்லைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை வகிக்கின்றன. அவைகள்
i. அஸ்ஸாம் ரைபிள்ஸ் (AR)
ii. சிறப்பு எல்லைப்புறப் படை (SFF)

**அஸ்ஸாம் ரைபிள்ஸ் (AR) :**
1. இது அஸ்ஸாம் பகுதியில் 1835ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் உருவாக்கப்பட்டது.
2. இது கச்சார் லெவி எனப்பட்ட குடிப்படை (இராணுவ பயிற்சி பெற்ற மக்கள் குழு) ஆகும். தற்போது இதில் 46 படைப்பிரிவுகள் உள்ளன.
3. இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

**சிறப்பு எல்லைப்புற படை (SFF) :**
1. சிறப்பு எல்லைப்புற படை என்பது ஒரு துணை இராணுவ சிறப்புப்படை ஆகும்.
2. இது 1962இல் உருவாக்கப்பட்டது.
3. இப்படை புலனாய்வு பணியகத்தின் (IB) நேரடி மேற்பார்வையில் இருந்தது.
4. பின்னர் இது இந்தியாவின் புலனாய்வு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவின் கீழ் செயல்பட்டு வருகிறது.

18) பஞ்சசீலத்தின் ஐந்து கொள்கைகளை எழுதுக.

**பதில் :** சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு, இந்திய வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் முதன்மை சிற்பியாக இருந்தார். நேரு உலக அமைதிக்கு ஆதரவாளராக இருந்ததால் தனது கொள்கை திட்டமிடலில் உலக அமைதிக்கு மிக முக்கிய இடத்தை வழங்கினார். பஞ்சசீலம் என்றழைக்கப்பட்ட அமைதிக்கான ஐந்து கொள்கைகளை அவர் அறிவித்தார். அவைகள்,
1. ஒவ்வொரு நாட்டின் எல்லையையும், இறையாண்மையையும் பரஸ்பரம் மதித்தல்.
2. பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை.
3. பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.
4. பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்.
5. அமைதியாக இணைந்திருத்தல்.

19) இந்தியா தனது அண்டை நாடுகளுடன் உறவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. எப்படி?

**பதில் :** இந்தியா தனது அண்டை நாடுகளுடன் உறவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது, எவ்வாறெனில்,

**1. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையானது :**

நட்புறவுகளை வளர்ப்பது மற்றும் அண்டை நாடுகளுடன் ஒத்துழைப்பது என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

**2. அண்டை நாடுகளுக்கான முன்னுரிமைக் கொள்கை :**

இக்கொள்கையானது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் ஒருபகுதியாகும். வள ஆதாரங்கள், கருவிகள் மற்றும் பயிற்சி ஆகிய வடிவில் அண்டை நாடுகளுக்கு தேவையான ஆதரவினை இந்தியா அளித்து வருகிறது.

**3. கிழக்குச் செயல்பாடு என்ற கொள்கை:**

தென்கிழக்கு ஆசியா இந்தியாவின் வடகிழக்கில் இருந்து ஆரம்பமாகிறது. மியான்மர் இந்தியாவிற்கும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள நாடுகளுக்கும் பாலமாக அமைந்துள்ளது.

இக்கொள்கையின் நோக்கம் ஆசியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதோடு இந்தோ-பசிபிக் பகுதியில் நிலையான மற்றும் பன்முக சமநிலையை உறுதி செய்வதும் ஆகும்.

**4. சார்க் (SAARC):**

தெற்காசிய நாடுகளுக்கிடையே சகோதரத்துவ பிணைப்புக்களை வளர்ப்பதற்காகவும் ஒத்துழைப்பு மற்றும் அமைதியான முறையில் இணைந்திருத்தல் ஆகியவற்றிற்காகவும் தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு நிறுவப்பட்டது.

சார்க் அமைப்பு 8 உறுப்பு நாடுகளைக் கொண்டது. அவைகள் இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான், நேபாளம், பூடான், இலங்கை, மாலத்தீவு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியனவாகும்.

**5. பி.சி.ஐ.எம் (BCIM):**

இது வங்காளதேசம், சீனா, இந்தியா, மியான்மர் பொருளாதார போக்குவரத்து, எரிசக்தி மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றில் எல்லை கடந்து ஒரு செழிப்பான பொருளாதார மண்டலத்தை உருவாக்க இக்கூட்டமைப்பு உதவுகிறது.

**6. பிம்ஸ்டெக் (BIMSTEC) :**

இது வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவிற்கான முயற்சி ஆகும். இதன் உறுப்பு நாடுகளாவன, வங்காளதேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, பூடான் மற்றும் நேபாளம்.

**7. பி.பி.ஐ.என் (BBIN) :**

பயணிகள் சரக்கு மற்றும் எரிசக்தி மேம்பாடு ஆகியவைகளின் பரிமாற்றத்திற்கான கூட்டமைப்பில் வங்காளதேசம், பூட்டான், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

20) பாதுகாப்பு படைப்பிரிவுகளில் பணிசெய்வது நாட்டின் மிக மதிப்பு மிக்க மற்றும் மரியாதைக்குரிய நிலையை உறுதிப்படுத்துகிறது. அதன் முக்கியத்துவத்தை பட்டியலிடுக.

**பதில் :** 1. பாதுகாப்புப் படைகளின் ஒரு பகுதியாக இருப்பது நாட்டின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் மரியாதைக்குரிய நிலைப்பாடுகளில் ஒன்றாகும்.

2. உற்சாகம், சவால்கள் மற்றும் சாகசங்கள் நிறைந்த ஒரு தொழிலைத் தேர்வு செய்ய விரும்பும் இளம் ஆர்வலர்கள் பாதுகாப்புப் படைகளில் சேரலாம்.

3. ஒரு சிப்பாய் தனது இளம் வயதில் உடல் ரீதியாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க வழக்கமான உடற்பயிற்சி உதவுகிறது.

4. அரசாங்க வேலைகிடைப்பது பொருளாதாரத்தில் எந்தவொருவருக்கும் சிறந்த விஷயம்.

5. சீருடையின் கவர்ச்சி, பேட்ஜ்கள் போன்றவை அதை அணிந்திருக்கும் நபர் மீது பெருமை சேர்க்கின்றன.

6. ஆயுதப்படைகள் எப்போதும் நாட்டின் வளர்ச்சியையும் நல்வாழ்வையும் ஊக்குவிக்கின்றன மேலும் அதில் பணியாற்றுபவர்களின் குடும்பத்தையும் கவனித்துக்கொள்கின்றன.

7. ஓய்வுக்குப் பிறகும் தனியார் வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

8. தலைமைத்துவம் பல்வேறு வகையான அனுபவங்களை கற்றுக்கொடுக்கிறது.

9. இது உலகின் மிகவும் பரபரப்பான மற்றும் புகழ்பெற்ற பணியாகும்.